# விளையாட்டுப்போட்டி 2024 இற்கான பெற்றோர்சந்திப்பில் எடுக்கப்பட்ட முடிவுகள்:

**நாள்:** 16.03.2024
**நேரம்:** 10:00 - 10:30

**உறுப்பினர்:**

- முழுமை பெற்ற உறுப்பினர்கள் மட்டுமே பதிவு செய்ய முடியும், அதாவது 2023 இலையுதிர்(Høst) காலம் வரை எம்மால் அறவிடப்பட்ட அனைத்து கட்டணங்களையும் செலுத்தியவர்கள்.
- 1 ஆம் வகுப்பு முதல் அதற்கு மேல் வகுப்பு வரையுள்ள மாணவர்கள் TBUK (தமிழ் சிறார் மற்றும் இளையோர் விளையாட்டுக் கழகம்) இல் சேர்ந்து அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். ஏனெனில் நோர்வே விளையாட்டுக் கூட்டமைப்பு (Idrettsforbund) 6 வயதிற்கு மேற்பட்டவர்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கணக்கிடுகிறது. மாணவர்களை அங்கு பதிவுசெய்வதால் மட்டுமே, விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்குரிய செலவிற்கான ஆதரவைப் பெறமுடியும்.
- இன்னும் 1 ஆம் வகுப்பில் தொடங்காத மாணவர்கள் TBUK இல் பதிவு செய்யத் தேவையில்லை மற்றும் பதிவு திறந்ததும் நேரடியாக பதிவுப் பக்கத்திற்குச் செல்வார்கள்.

**விளையாட்டுப்போட்டி என்றால் என்ன, அதனால் ஏற்படும் பயன்கள் என்ன?**

- மாணவர்களிடையே நல்ல உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதும், மகிழ்ச்சியுடன் மற்றும் நல்ல நினைவுகளை உருவாக்கும் போது அர்ப்பணிப்புகளும் புரிந்துணர்வுகளை ஏற்படுத்தும்.
- சிறந்த ஒத்துழைப்புடனும் ஒற்றும்மையுடனும் உள்ள சமூகமாக இருக்க வேண்டும்.

- சிலருக்கு, இந்நாள் வேடிக்கையாக விளையாடும் ஒரு நாளாக இருக்கலாம், ஆனால் சிலருக்கு இது விளையாட்டுத்தளத்தில் ஆர்வத்தை உருவாக்குவதாக அமையும்.
- எமது வளாகத்தின் பழைய மாணவன் ஒருவர் இன்று ஈட்டி எறிதலில் நோர்வே நாட்டின் ஒரு தேசிய விளையாட்டுவீரனகவும் சாதனையாளராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**மாணவர்கள்**

- இந்த ஆண்டு மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கும் வகையில் விளையாட்டுப் போட்டிகளைப் பற்றிய விளக்கமளிப்பதற்காக 10 ஆம் வகுப்பு மாணவர்களைப் பயன்படுத்துவோம்.
- கடந்த ஆண்டு போன்று இவ்வாண்டும் சிறுவர்நிலை மற்றும் மழலையார் வகுப்பு மாணவர்களுக்கு பந்துகளை வாளியில் போட்டுக் கொண்டு ஓடும் விளையாட்டு இடம்பெறும். 6 வயதுக்குட்பட்ட மாணவர்கள் TBUK இல் பதிவு செய்யத் தேவையில்லை என்பதனால், அவர்களுக்கான விளையாட்டுகள் போட்டியின்றி இடம்பெறும். இவர்களுக்கான விளையாட்டின் புள்ளிகளை இல்லப்புள்ளிகளுடன் இணைக்கப்படமாட்டாது, ஆனால் பங்குகொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.
- 1-10 வகுப்புகளுக்கான போட்டிகளில் வழங்கப்படும் புள்ளிகளையும்.
- ஒரு மாணவர் மூன்று தனிப்பட்ட விளையாட்டுகளுக்குப் பதிவு செய்யலாம், அத்துடன் 5-10 வகுப்புகளுக்குரிய குழுவிளையாட்டிலும் பதிவு செய்யலாம்.
- பயிற்சி அமர்வுகள் Stovnerbanen அல்லது Lillestrøm ஆகிய மைதானங்களில் ஒழுங்குசெய்யப்படும். கிழமைக்கு இரண்டு நாட்கள் பயிற்சிகளை நடாத்த முயற்சிசெய்வோம். பெரும்பாலும் பயிற்சிகள் 15வது அல்லது 16 வது கிழமை தொடங்கப்படும்.
- பயிற்சி தொடங்கிய பின்பு பதிவுக்கான இணைப்பு அனுப்பப்படும், இதன் மூலம் மாணவர்கள் பதிவுசெய்யும்போது விளையாட்டுகளைப்பற்றியும் செயற்பாடுகள் பற்றியும் சிந்தித்து முடிவுசெய்ய முடியும். மாணவர்கள் தாங்கள் பங்கேற்க விரும்பும் விளையாட்டுகளுக்குப் பதிவு செய்வது முக்கியம்.

- பயிற்சியாளர்களாகப் பெற்றோரில் யாராவது இணையவிரும்பினால் எம்மோடு மன்னஞ்சலினூடகத் தொடர்புகொள்ளவும்.
- கடந்த ஆண்டைப் போல, நடுவர்களாக பெற்றோர்கள் இடம்பெற மாட்டார்கள், ஆனால் பெற்றோர்களைத் தவிர்ந்த பல பயிற்சியாளர்கள் முக்கிய நடுவர்களாகப் பணியாற்றுவார்கள், மேலும் முன்னாள் மாணவர்கள் இணைந்து நடுவர்களாகப் பணியாற்றுவார்கள். பல இளைஞர்களை இணைக்க வேண்டும்.

**இல்லங்கள்**

- இவ்வாண்டும் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத்திலேயே இல்லங்கள் அமையும். கடந்த ஆண்டில் பிரிக்கப்பட்ட பட்டியலின் அடிப்படையிலேயே புதியவர்களையும் இணைக்கப்படும்.
- பூபதி என்ற மஞ்சள் அணியும், திலீபன் என்ற சிவப்பு அணியும் தொடர வேண்டுமா என வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பூபதி என்ற பெயர் பாடசாலைக்கும் இருப்பதால், திலீபன் என்ற இல்ல மாணவர்கள் கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டு இருந்தமைபோல் சிலர் உணர்ந்தனர். அதனால் பெயர்களைத் தவிர்த்து சிவப்பு மற்றும் மஞ்சள் இல்லமாக மட்டுமே இயங்கும் என முடிவெடுக்கப்பட்டது.

**இல்ல ஒப்பனைப் போட்டிகள்:**

- இவ்வாண்டும் இல்லங்களுக்காகத் தனி இடங்கள் ஒதுக்கி ஒப்பனைக்குப் புள்ளிகள் வழங்குவதா? இல்லையா? என்பதற்கான வாக்கெடுப்பில், அதனைத் தொடருவதென முடிவெடுக்கப்பட்டது.
- ஒவ்வொரு இல்லத்திற்கும் இடைவேளைக்கு முன் அல்லது பின் 45 நிமிடங்கள் தயாராவதற்கு வழங்கப்படும், TBUK இலிருந்து விளையாட்டுக்காகப் பெறும் ஆதரவைப் பொறுத்து ஒப்பனைக்காக வழங்கப்படும் தொகைக்குள்(மிகக் குறைந்த செலவில்) அழகாக ஒப்பனை செய்தல் வேண்டும்.
- எதனடிப்படையில் மதிப்பீட்டுப் புள்ளிகள் வழங்கப்படும் என்ற விபரம் முன்கூட்டியே வழங்கப்படும்.

**அணிவகுப்பு**

- பல ஆண்டுகளாக நாங்கள் அணிவகுப்பு நடத்துகிறோம், தொடருவதா? இல்லையா? என்ற வாக்கெடுப்பில், தொடருவதாக

முடிவெடுக்கப்பட்டது. வழமைபோல் 5-10 ஆம் வகுப்பு மாணவர்கள் பங்கேற்பார்கள். போட்டியின்றி அணிவகுப்பாக நடைபெறும்.

**மாணவர்களுக்கான குழு விளையாட்டு**

- 5-10 ஆம் வகுப்புகளில் உள்ள மாணவர்கள் குழு விளையாட்டுகளில் பதிவு செய்யலாம்.
- கடந்த ஆண்டு குழு விளையாட்டுகள் அதிக நேரம் எடுத்தமையினால், குழு விளையாட்டுகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, எதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- முடிவு: பெரும்பான்மையானவர்கள் அஞ்சல் ஓட்டப்போட்டியினைத் தொடரவேண்டுமென முடிவெடுத்தனர். நேரம் போதுமானால் குழையெடுத்தல் போட்டியினை நடாத்தலாம் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

**விளையாட்டுகளில் மாற்றம்?**

- பதிவுசெய்யும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து பல்வேறு போட்டிகளை ஏற்பாடு செய்ய வேண்டுமா இல்லையா, அதாவது ஒரு போட்டி நடாத்தப்படுவதற்கு முன்பு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்கள் இருக்க வேண்டுமா என்பது குறித்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- முடிவு: பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல் அனைத்து போட்டிகளும் நடாத்தப்படவேண்டும்.

**பெற்றோர்கள் விரும்பும் பெற்றோர்களுக்கான போட்டிகள்**

- பெற்றோர்கள் தாங்கள் விரும்பும் போட்டிகள் பற்றிய பரிந்துரைகளைச் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.
- கயிறிழுத்தல் மற்றும் நேரம் இருந்தால் அஞ்சல் ஓட்டம் நடாத்தலாம் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

**விளையாட்டுக் குழு**

- குறிப்பாக பின்வரும் பணிகளைத் திட்டமிடுவதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் உதவக்கூடிய குறைந்தது மூன்று நபர்களாவது இணைய வேண்டும்:
- தொழில்நுட்பங்களைக் கவனித்துக் கொள்ளக்கூடிய ஒருவர். பங்கேற்பாளர்கள் பட்டியலை அடையாளங்களுடன் உருவாக்கி, தேவையான வேறு பட்டியலை உருவாக்கி, அன்றைய நாளின் தொழில்நுட்ப விடயங்களைக் கவனித்துக் கொள்ளக்கூடிய ஒருவரும் (தேவையேற்படின் முன்பு பணிபுரிந்த ஒரு தன்னார்வலர், இப்பொறுப்பில் இணைபவருக்கு உதவியும் வழிகாட்டுதலும் வழங்குவதாகக் கூறியுள்ளார்).
- நடுவர் மற்றும் பயிற்சி மேலாளர் ஒருவர்: நடுவர்கள் மற்றும் பயிற்சியாளர்களைப் பெறுவதற்குப் பொறுப்பு, அனைத்து உபகரணங்களும் சரியாக உள்ளதா எனச் சரிபார்த்தல், நடுவர்களுக்கான கால அட்டவணையை உருவாக்குதல் மற்றும் அன்றைய நாளுக்கான கால அட்டவணையை உருவாக்குதல்.
- வெற்றிக்கிண்ணம் மற்றும் சான்றிதழ் பொறுப்பு: கோப்பைகள், பதக்கங்கள் மற்றும் டிப்ளோமாக்களை ஆர்டர் செய்து சரிபார்த்து, கோப்பை மற்றும் டிப்ளமோ விநியோகத் திட்டத்தை உருவாக்கி, அன்றே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.
- பெற்றோர்களில் யாராவது இத்திட்டமிடல் மற்றும் ஒழுங்கமைப்புப் பொறுப்புகளில் ஈடுபட விரும்பினால், 07/04/2024இற்குள் எமக்கு மின்னஞ்சல் மூலமாக அறியத்தரலாம்.
-

**இல்லப்பொறுப்பாளர்கள்**

- ஒவ்வொரு இலத்திற்கும் தனித்தனிப் பொறுப்பாளர்கள் தேவை. அவர்கள் விளையாட்டுக் குழுவிலும் இணைந்துகொள்வர்.
- இல்லப்பொறுப்பாளர் போதியளவு நேரம் ஒதுக்குவது முக்கியம், பயிற்சிகளுக்கும் வருவது நல்லது, கூட்டங்களில் கலந்து கொள்ளவேண்டும். முக்கியமாக குழந்தைகள் மற்றும் சிறார்களுக்கான அணித்தலைவர் என்பதால் குழந்தைகளிடம் பேசும் திறன் இருந்தால் நல்லது.

- 06/04/2024 அன்று நடைபெறும் குழுக் கூட்டத்தில் குழுவின் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
- பங்கேற்பதற்கும் அதே விதிகள் இங்கே பொருந்தும்: முழு உறுப்பினர்களாக இல்லாதவர்கள் அல்லது பிற காரணங்களுக்காக பொறுப்பேற்க முடியாதவர்கள் இல்லப் பொறுப்பாளர்களாகவோ அல்லது விளையாட்டுக் குழுவிலோ இணைந்துகொள்ள முடியாது.

**தங்களில் யாராவது மேற்குறிப்பிட்ட ஏதாவது பொறுப்புகளில் இணையவிரும்பினால் அல்லது வேறு ஏதாவது கேள்விகள் இருந்தால், மின்னஞ்சலினூடாகத் தகவல் தரவும். தொடர்புகொள்ளவேண்டிய மின்னஞ்சல் முகவரி: danshiyas@annai.no**